# Feminist Ideologies in the Short Stories of S. Dharman

**Uma S.N**
*Research Scholar, Department of Tamil*
*University College, Thiruvananthapuram, Kerala*

**Dr. Santhi. P**
*Professor in Tamil, Department of Tamil*
*University College, Thiruvananthapuram, Kerala*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346736

**Abstract**
*Literature is like a mirror. Its function is to blend all the events happening in society with imagination. We can see that this kind of literature has changed over time, from the Sangha period to the present day. Different types of literature have appeared in every period. From the Sangam period to the modern period, various types of literature have emerged. These literatures have recorded various ideas. In the same way, innovative ideas have also been recorded in modern literatures. Feminist thoughts reveal the feelings of women. Such feminist thoughts can also be seen in the works of So. Dharman. This article aims to explore this.*
***Keywords:*** *Life, Living being, Skillful Person, Cleverly, Three children, Wandered*

**Footnotes****
1. Puliyur Kesigan, *Tholkappiyam – Text and Commentary*, Poem No. 8
2. Puliyur Kesigan, *Purananuru – Text and Commentary*, Poem No. 312
3. S. Dharman, Perumoocchu, pp. 30–31
4. S. Dharman, Neerpazhi, p. 541
5. S. Dharman, Neerpazhi, p. 156
6. S. Dharman, Neerpazhi, p. 50
7. S. Dharman, Perumoocchu, p. 87

**References**
1. S. Dharman, *Neerpazhi*, 2020, Adayalam Publications, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy – 621310.
2. S. Dharman, *Perumoocchu*, 2023, Adayalam Publications, 1205/1 Karuppur Road, Puthanatham, Trichy – 621310.
3. Puliyur Kesigan, *Tholkappiyam – Text and Commentary*, Paari Nilayam, Broadway Road, Chennai.
4. Puliyur Kesigan, *Purananuru – Text and Commentary*, Gaurav Publications, 9, St. John's Church Complex, Rockins Road, Trichy – 01.

# சோ. தர்மன் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

***உமா. எஸ். என்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***முனைவர் ப. சாந்தி***
தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறை
பல்கலைக் கழகக்கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியம் என்பது கண்ணாடி போன்றது. சமுதாயத்தில் நிகழ்கின்ற எல்லா நிகழ்வுகளையும் கற்பனையோடு கலந்து தருவதே இலக்கியத்தின் பணி ஆகும். இத்தகைய இலக்கியமானது சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுவருவதை நம்மால் காணமுடிகிறது. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வொரு விதமான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்க காலம் முதல் நவீன காலமாகிய இன்றைய காலவரையிலும் பல்வேறு விதமான இலக்கியங்கள் உருவாகியுள்ளன. இவ்விலக்கியங்கள் பல்வேறு விதமான கருத்துக்களை பதிவுசெய்துள்ளன. அவ்வகையில் நவீன இலக்கியங்களில் புதுமையான கருத்துக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெண்ணியம் சார்ந்த கருத்துகளும் இடம் பெற்றுள்ளன. பெண்களின் மன உணர்வுகளை பெண்ணிய சிந்தனைகள் வெளிப்படுத்துகின்றன. சோ. தர்மன் படைப்புகளிலும் இத்தகைய பெண்ணிய சிந்தனைகளை காணமுடிகிறது. இதனை ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *உசிரு – உயிர், சமர்த்தி – சாமர்த்தியமாக, மூணுபுள்ளக – மூன்றுபிள்ளைகள், அலைஞ்சு – அலைந்து*

## முன்னுரை

தாய் வழி சமூகத்தில் பெண் தலைமை இடத்தில் இருந்தாள். தந்தை வழி சமூகம் உருவாகிய போது ஆண் பெண் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினான். இதன் காரணமாக பெண் இரண்டாம் நிலையை அடைந்தாள். அதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக பெண்கள் அடிமையாய் மாறவேண்டிய சூழ்நிலை உருவானது. பெண்கள் தன்னைத் தான் உணரத் தொடங்கிய போது தனக்காக தனது உரிமைகளுக்காக, சுதந்திரத்திற்காக போராடத் தொடங்கினார்கள். அதன் மூலம் பெண்ணியம் என்ற ஒன்று உருவானது. பெண்களின் நிலையையும் அவர்களின் மன உணர்வுகளையும் சோ. தர்மன் தனது சிறுகதைகளில் பதிவு செய்துள்ளதை காண முடிகிறது.

## பெண்ணியம் என்பதன் பொருள்

ஆங்கிலத்தில் “Feminism’ என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல் “femine’ என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. “பெண்” என்னும் சொல்லுக்கு “பெண்களுக்கு உரிய இயல்புகளை உடையவள்” என்று பொருள். பெண்ணியம் என்ற சொல், 1890-களில் இருந்த பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயல்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்படுகிறது. தமிழில் பெண்ணியம், பெண் நிலைவாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கி வருகின்றன. நாம் இதனை பெண்ணியம் என்று வழங்குகிறோம்.

**பெண்ணியத்தின்தோற்றம்**

18-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய சமூகத்தில் சில மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. இதற்கு அடிப்படையாக அமைந்தவை புதுமைக் கருத்துகள் ஆகும். இதன்படி, உலகத்தில் வழங்கும் எதையும் காரண காரியங்களோடு பகுத்தறிந்து, ஆராய்ந்து, தெளிந்து, உண்மை எனத் தெரிந்தவற்றையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்து பரவ ஆரம்பித்தது. சமூகத்தில் காலம் காலமாக வழங்கிவந்த ஏற்ற தாழ்வுகள், ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்பீடுகள் யாவும் விவாதத்திற்கு உரிய பொருள்கள் ஆயின.

இம்மதிப்பீடுகள் உண்மைக்கு புறம் பானவைகளாகக் கருதப்பட்டு சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி, எல்லோருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்பீடுகள் உருவாகத் தொடங்கின.

இப்புதிய சமூக மதிப்பீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவாக இரண்டு வேறு நாடுகளில் இரு பெரும் புரட்சிகள் தோன்றின. 1789-இல் விளைந்த பிரஞ்சுப் புரட்சி, 1776-இல் தோன்றிய அமெரிக்க புரட்சி.

இவ்விரு புரட்சிகளிலும் பெண்கள் பங்கு கொண்டனர். எனினும், இப்புரட்சிகள் பெண்களின் நிலைக்கு யாதொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. சமூகத்தில் பெண்கள் தாழ் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்நிலை மாறவேண்டும் என்ற கருத்துக்கள் ஆங்காங்கே தோன்ற ஆரம்பித்தன. மேரி உல்ஸ்டோன் கிராப்ட் என்ற ஆங்கில பெண்மணி 1792-இல் எழுதிய "பெண்களின் உரிமைகளை நியாயப்படுத்துதல்" என்ற புத்தகத்தில், ஆண் பெண் இயற்கையில் மாறுபட்ட தன்மைகளுடையவர்கள் அல்லர் என்று கூறினார்.

தற்காலத்தில் பெண்கள் ஆண்களிடமிருந்த மாறுபட்ட குணங்களை பெற்றிருப்பதற்குக் காரணம் அவர்கள்வளர்க்கப்பட்ட சூழ்நிலையே ஆகும்.

பெண்மையின்குணங்கள் என்றவை ஆண்களால் பெண்களுக்கு என தீர்மானிக்கப்பட்டவையாகும்.

உதாரணமாக, அடங்கியிருத்தல் என்ற குணம் முதலில் பெண்களுக்குரியதாகக் கருதப்பட்டு, பின்னர் அதுவே காலப் போக்கில் அவர்களுக்கு அழகு ஊட்டுவதாகவும் வர்ணிக்கப்படுகிறது.

பெண்கள் ஆண்களின் ஆதரவில் வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதால், அவர்கள் ஆண்களால் விரும்பப் படுகின்றவர்களாகவே வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

அவர்கள் காதலிப்பதையும், காதலிக்கப்படுவதையும் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்றனர். இவ்வாறான போக்குகள் பெண்களின் மனம் சரியாகப் பண்படவில்லை என்பதையே காட்டுகின்றன.

சமூகம் அவர்களின் திறமைகளை வெளிக் கொணர சரியான சூழ்நிலையை அளிக்கவில்லை. இந்நிலையை மாற்றப் பெண்களுக்கு கல்வி அளிக்கப்பட வேண்டும். இதுபெண்கள் ஆண்களை அதிகாரம் செய்வதற்காக அல்ல; அவர்களை தற்சார்புள்ளவர்களாக வாழ பயிற்சி அளிப்பதற்கே ஆகும்.

பெண்கள் பெறும் கல்வி அவர்களை அதிக அன்புள்ள மனைவியாகவும், அறிவுள்ள அன்னையாகவும் செயல்பட வைக்குமென்று மேரி உல்ஸ்டோன் கிராப்ட் கருதினார். பெண்ணியத்திற்கு அடிப்படையான சமத்துவம், சுதந்திரம் போன்ற கருத்துகள் முதன்முதலில் எழுந்தது பிரான்ஸ் நாட்டில் ஆகும்.

ஆனால் அவை ஆதரிக்கப்பட்டு பெண்ணிய இயக்கமாக உருவாகியது அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஆகும். இங்கிலாந்து பழமையான கலாச்சார பின்னணியை கொண்டது. ஆனால் அங்கு நிலவிய சமூக, பொருளாதார, அரசியல் சூழல்கள், படிப்படியாக புதுமைக் கருத்துக்

களை ஏற்றுக்கொள்ள ஏதுவான சூழலை உருவாக்கின. இத்தகைய புதுமைக் கருத்துகள் பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய நாடுகளில் மற்றும் அதன் பின்ன்புகீழ் நாடுகளில் பரவி வந்தன. பெரிய கருத்துகள் மேலை நாடுகளில் தோன்றியவளர்ந்த பின்பு இந்தியாவிலும் பரவியது.

### இலக்கியங்களில் பெண் படைப்பு முறை

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரையிலும் பெண்கள் காட்சிப் பொருளாகவும், நுகர் பொருளாகவும், அலங்காரப் பொருளாகவும் பார்க்கப்படுகிறாள். தொல்காப்பியர் பெண்ணின் பண்புகள் பற்றி குறிப்பிடும்போது அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண் பார்க்கு உரியென்ப என்று கூறுவதன் மூலம் அச்சம், நாணம், மடம் முதலிய பண்புகள் பெண்களுக்கே உரிய பண்புகளாகவும், புறச்செயல்களில் ஈடுபடாமல் ஒதுங்கி வாழ்தல் வேண்டும் என்கூறுவதாகவும் அமைகிறது.

“ஈன்றுபுறம் தருதல் என்தலைக்கடனே” என்ற புறநானூற்று பாடலின் வழிகுழந்தை பெற்ற தருதல் பெண்ணின் கடமையாகவே கூறப்பட்டுள்ளது.

பெண்களை ஆண்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளாகவே வைத்துள்ளனர் என்பதைக் இதன் வழியாக அறிய முடிகிறது. காதல், காமம் சார்ந்த உள்ளத்து உணர்வுகளை பெண்கள் வெளிப்படுத் தாமலிருப்பதே பெருமை என் கூறப்படுகிறது. இதை “கடல் அன்னகாமம் உழந்து” என்ற குறள் மூலத்தில் அறியலாம். பெண்கள் கணவனுக்குத் தாண்டும், பணி விடைகள் செய்து வாழவேண்டுமென்ற பெணின் அடிமைத்தனத்தை “தெய்வம் தொழாள் கொழு நன் தொழுது எழுவாள்” என்னும் குறள்வழியாக அறியமுடிகிறது.

கல்வி, வேலைவாய்ப்புகள், திருமணம், குடும்ப சூழல், பாலியல் சீண்டல்கள், வன்முறைகள், குழந்தை வளர்ப்பு என சமூகத்தால் கற்பிக்கப்படும் அனைத்து நிலைகளிலும் பெண் இரண்டாம் நிலையில் வைக்கப்படுகிறாள்.

ஆண்களின் அதிகாரத்திற்கு எதிர் பார்ப்புகளுக்குள் உள்ளவர்களாகவே பெண்கள் வாழவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகிறாள் என்பதில் ஐயம் இல்லை.

### சோ. தர்மன் சிறுகதைகளில் பெண்ணிய சிந்தனைகள்

பெண் தனக்குரிய வனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லை என்பதை இக்கதை சுட்டுகிறது. கல்லூரியில் தன்னுடன் படிக்கும் ஒருதலித் மாணவன் மீது காதலித்தாள் என்ற காரணத்திற்காக, தனது மகள்என்றுப் பாராமல, அவளுடைய தந்தை அவளைக் கொன்றுவிடுகிறார். இதைக் கண்ட அவரது மனைவி தன்னுடைய கண்ணீரையும், துன்பத்தையும் மனதிலே நிறுத்தி, ஊமையாய் சிறிது காலம் வாழ்ந்து விட்டு, தன் கணவனையே கொலை செய்த நிகழ்வை “ஊமைகாயங்கள்” என்ற சிறு கதை வழியாக காணமுடிகிறது.

பெத்த மகளைக் கொன்ற தூக்குல தொங்கவிடும்போது ஒரு சொட்டு கண்ணீர் வரல், இன்னைக்கு நாய்க்குட்டி செத்துப் போச்சு நுகண்ணுலக் கண்ணீர் வருது, ஒனக்கு வாக்கப்பட்டதுக்குப் பதிலாக ஒரு நாய்க்கு வைக்கப்பட்ட இரண்டு குட்டி போட்டிருந்தா கூட அந்த நாய்க் கண் லரெண்டுச் சொட்டுகண்ணீர் வரும், “மாமாமேல பெட்ரோல் ஊத்தி தீவச்சு நீ தான் கொன்னுட்டதாகப் பேசிக்கிறாங்க”, “ஊரு ஆயிரம் பேசும்டா, அது உண்மையாகிருமா? நிய்யும் எம்புருஷனும் சேர்ந்துதான் என்னோட மூத்த மகளைக் கொன்ற தூக்குல தொங்கவிட்டதா பேசுது” என்று கூறுவதன் மூலம் தனது மன வேதனைகளை பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. தன் மகளைக் கொன்றதால்

முதலில் பேசாமலிருந்த தன் துன்பத்தை அடக்கி அழுகிறாள். அதுவே தாங்க முடியாமல் ஆனதால், தன் கணவனை கொன்றுவிடுகிறாள். அந்த நிலைக்கு அவள் தள்ளப்படுகிறாள். குடிக்கு அடிமையாகிப் போன கணவன் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைக்காகவும், வாழ்வின் அன்றாட தேவைகளுக்காகவும் பூவிற்றுப் போராட்ட வாழ்க்கை வாழும் பெண்ணின் அவல நிலையைச் குறித்து "மணம்" என்னும் சிறுகதையில் ஆசிரியர் பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. "ஆமா நான் ரெண்டாண்டர மா இந்த பயலுக்கு ஓடியாறன். சண்டாளி கர்ம சண்டாளி, குட்டியும் குருவானும் மூணுப்புள்ளய பெத்து போட்டுட்டு கண்ண மூடிட்டா, எம் ஓடம் பெறந்தாதான். வம்பாபுள்ளக அலஞ்சு போயிருமேன்னு, எந்த தாயும் தகப்பனும்ர்ந்து கெட்டி வச்சுட்டாக. அவ புண்ணிய வாட்டியா போய் சேர்ந்திட்டா. நாங்கெடந்துசீரழியிறன்." இந்த வரிகள் தனது விருப்பமின்றித் தனக்காக இல்லாத காரணத்தால், குழந்தைகளைக் கவனிப்பதற்காக இரண்டாண்டாரமாய் திருமணம் செய்த பெண்ணின் மனநிலையை சுட்டுகிறது. அப்பெண் தன்விருப்பைச் சொன்னாலும், அவர்கள்அதை ஏற்றுக் கொள்வதில்லை.

திருமணம்த் முடிந்துச் செல்லும் பெண்களுக்கு கணவன் வீட்டிலும் எந்த ஓய்வும், சுதந்திரமும் கிடைப்பதில்லை. தன் கணவருடன் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்யும் அவள் நிலையை "அடமானம்" என்னும் கதையாக எடுத்துரைக்கிறது. "நீர் என்ன கையில் இருந்தா எண்ணப்போறீர்? அங்க போய் கம்பெனிக்கு தான் போகப்போறா அந்தக் கம்பெனில் வாங்கி அவக் குடுப்பா, பெறவு அவ வேலைச் செஞ்சு கழிப்பா" என்ற வரிகளில் பெண்கள் தங்களின் வாழ்வின் இறுதிவரை தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டிய நிலை உள்ளது என்பதை பதிவு செய்துள்ளது.

பட்டாசு தொழிற்சாலையில் வேலையின்மை காரணமாக, உணவுக்கு கூட வழி இல்லாமல் வாழ்கின்ற பெண்களின் நிலையை குறித்து "ஈரம்என்ற சிறுகதை" கூறுகிறது. தாயி யெம்மாசி வாகாமி எந்திரிம்மா, எந்திரிச்சு மொகத்தக் கழுவு, அம்மாமாவு வாங்கியந்திருக்கன்பாரு, எந்திரி, என் ராசாத்தியில்ல என்று கூறுவதன் வழியாய், உணவு இல்லாமையால் வேதனைப்படும் நிலையை உணர முடிகிறது.

"சமர்த்தி" என்ற சிறுகதையில் வயதான மத்திய பெண்தன் கணவன், மகன்கள் இவர்களை எல்லாம் இழந்த பிறகு, தனது குடும்பத்தை கருத்தோடு நடத்தும் நிலையைப் போராட்ட உணர்வோடு வாழும் நிலையையும் கூறுகிறது. இவ எல்லாம் உசுருவச்சு இருக்கணும் ஆக்கும், இனிமே இருந்து என்னத்த அள்ளிக் கெட்டப்போறா, புருஷன் தூக்கிவிட்டாச்சு, மூனு ளளவட்டங்களையும் தூக்கி குடுத்திட்ட, நாம இன்னாநாண்டு கிட்டுச் செத்துப் போயிருவேன் என்ற வரிகள் இந்த சமூகத்தில் வயதான பெண்கள் எவ்வாறு போராட்ட உணர்வோடு வாழ்ந்திருப்பார்கள் என்பதை அறிய முடிகிறது.

## நிறைவுரை

சோ. தர்மன் தனது சிறுகதைகளில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை படம் பிடித்துள்ளார். குறிப்பாக பெண்களின் அவல வாழ்வை சித்திரித்துள்ளார். பெண் தன் விருப்பப்படி திருமணம் கூட செய்ய இயலாத நிலையில் தான் இருந்துள்ளாள் என்பதை அவர் சுட்டியுள்ளார்.

திருமணமான பின்னரும் கணவன் சரியில்லாததால, அவள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகிறாள் என்பதைப் பதிவுசெய்துள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. புலியூர்கேசிகன், தொல்காப்பியம் மூலமும் உரையும், பா. எண் - 8
2. புலியூர்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், பா. எண் - 312
3. சோ. தர்மன், பெருமூச்சு, ப. எண் - 30, 31.
4. சோ. தர்மன், நீர்ப்பழி, ப. எண் - 541.
5. சோ. தர்மன், நீர்ப்பழி, ப. எண் - 156.
6. சோ. தர்மன், நீர்ப்பழி, ப. எண் - 50.
7. சோ. தர்மன், பெருமூச்சு, ப. எண் - 87

**துணைநூற்பட்டியல்**


1. சோ. தர்மன், நீர்ப்பழி, 2020, அடையாளம் பதிப்பகம், 1205/1 கருப்பூர்சாலை, புத்தாநத்தம், திருச்சி - 621310.
2. சோ. தர்மன், பெருமூச்சு, 2023, அடையாளம் பதிப்பகம், 1205/1 கருப்பூர்சாலை, புத்தாநத்தம், திருச்சி - 621310.
3. புலியூர்கேசிகன், தொல்காப்பியம் மூலமும் உரையும், பாரிநிலையம், பிராட்வேசாலை, சென்னை
4. புலியூர்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், கௌராபதிப்பகம், 9, செயின்ட்ஜான்சர்ச் வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 01.